
# இதுதான் ராமராஜ்யம்

சுப.வீரபாண்டியன்



# முன்னுரை

ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன் இச்சிறுநூல், திராவிட இயக்கத்தமிழர் பேரவையினால் வெளியிடப்பெற்றது. அந்த ஆண்டே விற்றும் தீர்ந்து விட்டது. எனினும் மறு அச்சு கொண்டுவராமல் விட்டுவிட்டோம். ஆனால் இன்றைய அரசியல் சூழல் மீண்டும் இந்நூலின் தேவையை எங்களுக்கு உணர்த்தியது.

சில நாள்களுக்கு முன்னர், ராம ராஜ்ய ரத யாத்திரை தமிழகத்திற்குள் நுழைந்தபோது ஏற்பட்ட எதிர்ப்பு குறித்துச் சரியான புரிதல் இன்றி, அவர்கள் மதத்தை அவர்கள் பரப்பக்கூடாதா என்று சிலர் கேட்டனர். ராம ராஜ்ஜியம் என்பது வெறும் ஆன்மீகப் பரப்புரை அன்று, அது ஓர் அரசியல் முழக்கம். ராம ராஜ்ஜியம் ஏற்படுமானால் அது எப்படி இருக்கும் என்பதை விளக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது. இப்போது அது காலத்தின் பெரும் தேவையாக உருவெடுத்துள்ளது.

இந்நோக்கில், இந்நூலை மீண்டும் வெளிக்கொண்டு வரவேண்டும் என்று வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர்கள் தோழர்கள் கார்த்திக், மேடவாக்கம் அன்பு இருவரும் வலியுறுத்தினர்.

அதன் விளைவாக, இந்நூலின் இரண்டாம் பதிப்பு இப்போது உங்கள் கைகளில்!

**- சுப.வீரபாண்டியன்**

Scanned by CamScanner

வால்மீகி ராமாயணத்தைப் பண்டித நடேச சாஸ்திரியார், சி. ஆர். ஸ்ரீநிவாச அய்யங்கார், நரசிம்ம ஆச்சாரியார், கோவிந்தராஜர், அண்ணங்கராச்சாரியார் முதலியோர் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். அவற்றுள், "ஸங்கீத பீஷ்ம, ஸங்கீத விமர்சகாசார்ய, அபிநவ த்யாகப்ரஹ்ம கீர்த்தனாசார்ய உ.வே.சி.ஆர். ஸ்ரீநிவாச அய்யங்கார் ஙி.கி.," அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ள "உத்தரகாண்டம் தமிழ் வசனம்" என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டுள்ள செய்திகளைக் கொண்டு இச்சிறுநூல் எழுதப்படுகின்றது. உத்தரகாண்டம் மொத்தம் 111 சருக்கங்களைக் கொண்ட நூல். இராமனின் ஆட்சி, அங்கு மக்களின் நிலை, சீதைக்கு நேர்ந்த நிலை, இராம, இலக்குவர்களின் மரணம் முதலான பல செய்திகள் அக்காண்டத்தில் உள்ளன.

இராமன் அயோத்தியை 11,000 ஆண்டுகள் ஆண்டதாகவும், இறுதியில் சரயூநதியில் இறங்கித் தற்கொலை செய்து கொண்டதாகவும் உத்தரகாண்டம் கூறுகின்றது. அந்த 11,000 ஆண்டுகால ஆட்சி எப்படியிருந்திருக்கும் என்பதை அறிய , ஒரு பானை சோற்றுக்கு இரு சோறு பதமாக, இரண்டு நிகழ்வுகள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஒன்று, இராமன் ஆட்சியில் நாடு எப்படி இருந்தது என்பது; இன்னொன்று வீடு எப்படி இருந்தது என்பது.

Scanned by CamScanner

# ஏன் இந்தச் சிறுநூல்?

சங் பரிவாரங்களின் முதன்மையான நோக்கமே, 'பாரத வர்ஷத்தில் ராம ராஜ்யத்தை' அமைப்பதுதான். அவர்களின் முதல் எதிரியான காந்தியாரின் வேட்கையும் ராமராஜ்யத்தை உருவாக்குவதுதான். எனவே ராமராஜ்யம் என்பது, இரு துருவங்களின் ஒரு கனவு.

எனவே, அந்த ராமராஜ்யம் எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்ள நமக்கு ஆவல் ஏற்பட்டது. அந்த ஆசையைக் கம்பராமாயணம் நிறைவேற்றாது. இராமன் முடிசூடி, எல்லோர்க்கும் பரிசுகளை நல்குவதோடு கம்பராமாயணம் முடிந்துவிடுகிறது.

*"அரியணை அனுமன் தாங்க*
*அங்கதன் உடைவாள் ஏந்த*
*பரதன்வெண் குடைக விக்க*
*இருவரும் கவரி வீச*
*விரைசெறி குழலி ஓங்க*
*வெண்ணையூர்ச் சடையன் தங்கள்*
*மரபுளோர் கொடுக்க வாங்கி*
*வசிட்டனே புனைந்தான் மௌலி"*

அவ்வளவுதான் கம்பர் தரும் செய்தி. மௌலி (மகுடம்) புனைந்தபின் இராமன் எவ்வாறு ஆட்சி நடத்தினான் என்னும் செய்திகள் கம்பர் நூலில் இல்லை.

பாலகாண்டம் தொடங்கி, உத்தரகாண்டம் வரை ஏழு காண்டங்களை வால்மீகி ராமாயணம் கொண்டிருக்க, கம்பரோ, ஆறாவது காண்டமான யுத்த காண்டத்தோடு, தன் காப்பியத்தை நிறைவு செய்துவிட்டார். ஏழாவது காண்டத்தை ஏன் தமிழில் படைக்கவில்லை என்பது தெரியவில்லை.

ஆதலால், ராமராஜ்யம் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால், வால்மீகியின் உத்தரகாண்டத்தையோ, அதைத் தமிழில் ஆக்கியிருக்கின்ற ஒட்டக்கூத்தரின் படைப்பையோ படிக்க வேண்டும். வழிநூலைக் காட்டிலும், மூல நூலிலிருந்தே செய்திகளைத் தொகுக்கலாம் என்று தோன்றியது.

Scanned by CamScanner

ஒரு நாள் நானும், நண்பர் பொள்ளாச்சி உமாபதியும், உத்தரகாண்டத்தை தேடிப் புறப்பட்டோம். அவ்வருடைய மகிழுந்தில் சென்னை நகர் முழுவதும் சுற்றிப் பல புத்தகக் கடைகளிலும் தேடியும், வால்மீகி எழுதிய உத்தரகாண்டத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு எங்கும் கிடைக்கவில்லை. அதனை வெளியிட்ட தி லிட்டில் பிளவர் பதிப்பகத்திலேயே அது இல்லை.

ஆனால் அங்குதான் ஒரு செய்தி கிடைத்தது. 1963ஆம் ஆண்டிற்குப் பிறகு, உத்தரகாண்டத்தை மறுபதிப்புச் செய்வதில்லை என்பதே அச்செய்தி. ஏன் என்று கேட்டோம். "உத்தரகாண்டம் படிப்பது குடும்பத்துக்கு நல்லதில்லேன்னு பெரியவா சொல்லிட்டா" என்றார்கள்.

அப்போதுதான் அதைக் கண்டுபிடித்துப் படித்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தோம். பொதுவாகவே, நம்மவர்களிடம் படிக்கும் பழக்கம் குறைந்து கொண்டு வருகிறது. இதில், 'குடும்பத்துக்கு நல்லதில்லை' என்று வேறு சொல்லிவிட்டால், பிறகு யார் படிக்கப் போகிறார்கள்.

ஒன்று மட்டும் புரிந்தது. அந்த நூல் திட்ட மிட்டே மறைக்கப்படுகிறது.

நேராகப் பெரியார் திடல் நூலகத்திற்குச் சென்றோம். அடடா, பலரது உரைகளோடு உத்தரகாண்டம் அங்கே பத்திரமாக இருந்தது. பண்டித; இ.மு. சுப்பிரமணிய பிள்ளை (சந்திரசேகரப் பாவலர்) எழுதிய, 'இரமாயண ஆராய்ச்சி உத்தரகாண்டம்' என்னும் நூலும் கிடைத்தது.

படி எடுத்து வந்து, மொத்த உத்தரகாண்டத்தையும் படித்தபோது, தலை சுற்றியது. பொருளற்ற, ஆபாசமான பல புராணக் கதைகள் நிரம்பி வழிந்தன. அந்நூலைப் படிப்பது குடும்பத்திற்கு நல்லதோ இல்லையோ, மூளைக்கு நல்லதில்லை என்று புரிந்தது.

படித்து முடித்தபோதுதான், ஏன் அதை மறைக்கின்றனர் என்பது தெளிவானது.

அந்நூலிருந்து சில துளிகளை மட்டும் இங்கு எடுத்துத் தந்துள்ளேன். படியுங்கள்ஞ் ராமராஜ்ஜியம் எப்படிப் பட்டதென்று எல்லோர்க்கும் புரியும்

**– சுப. வீரபாண்டியன்**

Scanned by CamScanner

## ராமராஜ்யத்தில்
# நாட்டின் நிலை

இராமன் தன் நாட்டை வருணாசிரமத் தருமப்படியே ஆண்டவந்தான், அதாவது ஒவ்வொரு வருணத்திற்கும் ஒவ்வொரு நீதி என்பதே அவனுடைய ஆட்சிமுறையாக இருந்தது. ஒரு குற்றத்தைப் பார்ப்பனன் ஒருவன் செய்தால் அவனுக்குரிய தண்டனை ஒன்றாகவும், அதே குற்றத்தைச் சூத்திரன் ஒருவன் செய்தால் அவனுக்குரிய தண்டனை இன்னொன்றாகவும் இருக்கும். இதைத்தான் மநுநீதி என்கிறனர்.

மநுநீதி உருவானது ஐயாயிரம் ஆண்டுகளுக்குள்ளேதான். ஏசு பிறப்பதற்கு முன்பு, மாமன்னர் அசோகரின் கொள்ளுப்பேரனின் ஆட்சிக்காலத்தில் நாடு பலவீனப்பட்டிருந்தது. அந்த நேரம் பார்த்து, அரசன் தலையை வெட்டிவிட்டுப் புஷ்யமித்திரன் என்னும் பார்ப்பனன், தானே அரசனாகி, 'சுங்க வம்ச சாம்ராஜ்யத்தை' (Sunga Dynasty) ஏற்படுத்தினான். அந்த சாம்ராஜ்யத்தில்தான், சுமதி பார்கவா என்னும் பார்ப்பானால் எழுதப்பெற்ற மனுநீதி என்னும் கொடிய சட்டம் நடைமுறைக்கு வந்தது. மனு என்றால் சான்றோன் என்று பொருள். சுமதி பார்கவா தனக்குச் 'சான்றோன்' என்று புனைபெயர் சூட்டிக்கோண்டு, அந்தச் சட்டத்தை எழுதி முடித்தான். வருணத்திற்கு ஒரு நீதி கூறும் அந்நூல், வருணங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றியது.

இராமனோ, பல லட்சம் ஆண்டுகளுக்கு முன், திரேதா யுகத்தில் ஆட்சி நடத்தினான் ஏன்று சொல்லப்படுகின்றது.



Scanned by CamScanner

*(யுகம் பற்றிய கணக்குகள் மிகவும் 'அபத்தமானவை' யாக உள்ளன. திரேதாயுகம், துவாபர யுகம், கிருதயுகம், கலியுகம் என நான்கு யுகங்கள் உண்டெனவும், அனைத்து யுகங்களின் மொத்தக் காலம் 43 இலட்சத்து, 20 ஆயிரம் ஆண்டுகள் என்றும் கூறுகின்றனர். ஆனால், இராவணன் மட்டும் 50 இலட்சம் ஆண்டுகள் ஆண்டான் என்று வால்மீகி இராமாயணம் கூறுகின்றது. அவாள் கூற்றுப்படி இப்போது நடப்பது கலியுகம், அப்படியானால், கலியுகம் முடிந்த பின்னும், 6 இலட்சத்து 80 ஆயிரம் ஆண்டுகளுக்கு இரவணன் ஆட்சி இருக்கும்! என்ன கூத்து இது?)*

ஆகவே, பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனுநீதிக்கும் முன்பே வருணத்திற்கு ஒரு நீதியைக் கொண்டு ஆண்டவன் இராமன்தான் என்று ஆகின்றது.

அதற்கான ஆதாரம், உத்தரகாண்டத்தின் 73–76 ஆம் சுருக்கங்களில் காணப்படுகிறது.

73ஆம் சருக்கத்தின் தொடக்கத்தில், இராமனின் அரண்மனையில் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

வயதான பார்ப்பனர் ஒருவர் உயிரிழந்த தன் மகனின் உடலைத் தூக்கிக் கொண்டு அரண்மனைக்கு வருகின்றார். இன்னும் 14வயது கூட ஆகாத தன் பிள்ளை இறந்துவிட்டானென்று கூறி அவர் கதறி அழுகின்றார். அப்போது, " எனக்கு என் புத்திரன் உத்திரக்கிரியைகளைச் செய்ய வேண்டியிருக்க, அவன் பால்யத்திலேயே எமலோகத்திற்குப் போகும்படியான கோர காரியம் என்ன செய்தேன்? இதுவரையில் இப்படிப்பட்ட அநியாயத்தைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, இந்த ராமனுடைய ஆளுமையில் மாத்திரமே இவ்விதமான அகாலமரணம் ஸம்பவித்திருக்கிறது. ராமன் ஏதோ மஹாபாபத்தைச் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த தேசத்தில் குழந்தைகளுக்கு மிருத்யுபயம் உண்டாகுமா?" என்று கூறி ஓவென்று குரலெத்து அழுகின்றார்

அழும் ஒலி கேட்டு இராமரும், அவன் தம்பியரும், அரண்மனையில் உள்ளோரும் வெளியில் வருகின்றனர். இராமனைப் பார்த்த அந்த முது பார்ப்பனர், மிகவும் சினம் கொண்டு, "மஹாராஜரே! இந்த கோஸல ராஜ்ஜியத்தில் பிரஜைகளை ரஷிக்க நாதனில்லை என்று தோன்றுகிறது" என்று உரக்கக் கூவுகின்றார். இப்பொழுதே தன் மகனை உயிர்ப்பிக்க வேண்டும் என்றும். இல்லாவிடில் தானும், தன் பாரியாளும் (மனைவி), அரண்மனை வாசலிலேயே உயிர்விட்டு விடுவோம் என்று, அதனால் 'பிரஹ்மஹத்ய தோஷம்' ஒவ்வொரு நிமிஷமும் உபத்திரிக்கும் என்றும் மிரட்டுகின்றார்.



Scanned by CamScanner

அவருடைய மிரட்டலோடு 'அகால மரணம்' எனப் பெயரிடப்பட்ட 73 ஆம் சருக்கம் முடிவடைந்து, 'யுக தர்மம்' என்னும் 74 ஆம் சருக்கம் தொடங்குகின்றது.

பார்ப்பனரின் துக்கம் கண்டு இராமன் பதறிப்போகின்றார். உடனடியாகத் தம்பியர்களையும், அமைச்சர்களையும், வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, நாரதர் முதலானோரை அழைத்து அரசவையைக் கூட்டுகின்றனர். நிலைமையை விளக்கி, 'ஏன் இப்படி?' என்று கேட்க, "இந்தக் குழந்தைக்கு ஏன் அகால மரணம் நேர்ந்ததென்று நான் கூறுகிறேன்" என்றார் நாரதர்.

கிருதயுகம் தொடங்கி, ஒவ்வொரு யுகத்திலும் எது தருமம் என்பதை விளக்கும் நாரதர், "இராமன் ஆண்டுகொண்டிருக்கும் திரேதாயுகத்தில் பார்ப்பனர்களும், சத்ரியர்களும் மட்டும்தான் தவம் மேற்கொள்ளலாம் என்பது தருமம். ஆனால் உன் ராஜ்ஜியத்தில் யாரோ ஒரு சூத்திரன் தவம் செய்கிறான். இந்தப் பிராமணனின் மகன் அகால மரணமடைந்ததற்கு அதுவே காரணம்" என்று தன் 'ஞான திருஷ்டி' யால் கண்டுபிடித்துச் சொல்கிறார். அது மட்டுமல்லாமல், "நியாயமாய் ராஜபரிபாலனம் செய்பவன், பிரஜைகள் செய்யும் வேதாத்யனத்திலும் தபஸிலும், வைதிக லௌகிகக் கிரியைகளிலும், புண்ணியத்திலும் பாகத்தை அடைவது போல், அஜாக்கிரத்தையால், ரஷிக்கத் தவறுகிறவன், அவர்கள் செய்யும் பாபத்திலும் பாகத்தை அடைகிறான்" என்று கூறி, இராமருக்கு ஓர் எச்சரிக்கையும் விடுகிறார். அதாவது, சூத்திரன் தவம் செய்யும் 'அதர்மத்தை' அனுமதித்தால், அந்தப் பாவத்தில் ஒரு பங்கு அரசனுக்கும் வந்துவிடும் என்பது நாரதரின் அபாய அறிவிப்பு.

இத்துடன் 74 ஆம் சருக்கம் நிறைவடைகிறது. 'தபஸ்வியைக் காணுதல்' என்பது 75 ஆம் சுருக்கம்.

நாரதருடைய சொற்களைக் கேட்ட இராமர் அமிருதபானம் அருந்தியது போல் மகிழ்கிறார். இலக்குவனை அழைத்து," நீ அந்த பிராமணரிடம் சென்று, கொஞ்சகாலம் பொறுத்திருக்கும்படி பிரார்த்தித்து ஸமாதானம் செய். அந்தக் குழந்தையின் தேகத்தை எண்ணெய்க் கொப்பரையில் வைத்து, வாசனைத் திரவியங்களால் காப்பாற்றுங்கள்" என்று ஆக்ஞாபிக்கிறார்.

பிறகு தன் புஷ்பக விமானத்தை வரவழைத்து, அதில் ஏறி ஆயுதபாணியாய்ப் புறப்படுகின்றார். முதலில் மேற்குத் திக்கில் மிக எச்சரிக்கையாய்த் தேடிப் பார்த்தும் எந்த அதர்மத்தையும் காண முடியவில்லை. பிறகு வடக்குதிசையில் சென்று தேடுகின்றார். அங்கும் எதுவும் இல்லை. மூன்றாவதாக்க் கிழக்குத் திசை நோக்கிச் செல்கிறார்.



Scanned by CamScanner

அந்தப் பகுதி' நிர்மலமான கண்ணாடி போலத் தெளிவாக இருக்கின்றது.

இறுதியில், தெற்குத் திசை நோக்கிப் பயணப்படுகின்றார். அங்குதான் அந்த அதர்மம் அவர் கண்ணில் படுகின்றது. விந்திய பர்வத்திற்கு அடுத்த சைவலமென்ற மலையின் சாரலில், ஒரு பெரிய ஏரி உள்ளது. அதனருகில் ஒரு தபஸ்வி, ஒரு மரத்தின் கிளையில், தலைகீழாய்த் தொங்கியபடி கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தார்.

இராமன் அந்த தபஸ்வியின் அருகில் சென்று, "நீ கடுமையான விரதத்தை அனுஷ்டிக்கின்றாய். இவ்வளவு உறுதியாய்த் தவம் செய்யும் நீ யாரென்று அறிய ஆசை கொண்டேன். நான் அயோத்தியாதிபதி. தசரத புத்திரனான ராமன். நீ எந்த வருணத்தைச் சேர்ந்தவன்? நீ பிராம்மணனா? பராக்கிரமசாலியான ஷத்ரியானா? நான்காம் வருணத்தவனா? நிஜத்தைச் சொல்" என்று கடுமையாய்க் கேட்க, தலைகீழாகத் தொங்கியபடியே, தன் வருணத்தை அவர் தெரிவித்தார்.

"மஹாராஜா! நான் நான்காம் வர்ணத்தவன். சம்பூகன் என்று எனக்குப் பெயர். இந்தச் சரீரத்துடன் தேவபதியை அடைய விரும்புகிறேன். ஆகையால் பொய் சொல்ல மாட்டேன்" என்று அவர் சொல்லும் விடையுடன் 'சம்பூகனுடைய வதம்' என்னும் 76 ஆம் சருக்கம் தொடங்குகின்றது.



உடனே, இராமன், வேறு எது குறித்தும் கேட்காமல், மின்னல் வேகத்தில் உறையிலிருந்து தன் கத்தியை உருவிச் சம்பூகனின் தலையை வெட்டினான். தேவர்கள் அனைவரும் 'நல்லது,நல்லது' என்று ஆர்ப்பரித்து மகிழ்ந்தார்களாம். அவர்கள் இராமனைப் பார்த்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க, அந்த பிராமண புத்திரன் உயிர் பிழைத்தால் போதும் என்றானாம் இராமன்.

மறுமொழி புகன்ற

தேவர்கள், "ரகுவீர ! கவலைப்படாதே. அந்தக் குழந்தை பிழைத்தெழுந்து பெற்றோர்களுடன் ஸுகமாயிருக்கின்றன். இந்த தபஸ்வியை நீ கொன்ற ஷணத்திலேயே அவன் உயிர்பெற்று எழுந்தான். உனக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும்" என்று வாழ்த்தினார்களாம்.

சம்பூகன் கதை இதுதான். இதன் மூலம் நாம் 'ராமராஜ்யம்' எப்படிப்பட்டது. என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.

கிஷ்கிந்தா காண்டத்தில், மரத்திற்குப் பின்னால் மறைந்திருந்து இராமன் வாலியைக் கொன்றது குறித்து ஏராளமான விவாதங்கள் உள்ளன. ஆனால் அவற்றிற்கெல்லாம் ஏதாவதொரு சமாதானத்தை நம் தமிழ்ப் புலவர்கள் கூறிவிடுவார்கள்.

ஆனால் எந்தச் சமாதானமும் கூற இயலாத வகையில் இந்தச் 'சம்பூக வதம்' அமைந்துள்ளது. சூத்திரன் என்பவன் இழிவானவன், அவன் மிக உயர்வான தவத்தை மேற்கொள்ளக் கூடாது என்பதே ராம ராஜ்ஜியத்தின் சட்டமாக இருந்துள்ளது. சத்திரியரான இராமர், பார்ப்பர்னகள் மனம் மகிழும்படி, நான்காவது வருணத்தினரைக் கொலை செய்துள்ளார் என்பதே நமக்குப் புலனாகும் செய்தி.

இன்றைய வழக்குப்படி, அந்தப் பார்ப்பனர், இராமர், சம்பூகர் எல்லோருமே இந்துக்கள்தாம். (அன்றைய வழக்கில், 'இந்து மதம்' என்னும் பெயரே அறியப்படாத ஒன்று). ஆனால், ஓர் இந்துவின் தூண்டுதலால், இன்னொரு இந்து, மூன்றாவது இந்துவைக் கொலை செய்துவிடுகின்றார். எனவே ராமரஜ்யம் ஏற்பட்டால், இந்துக்கள் என்று சொல்லப்படும் பெருவாரியான உழைக்கும் மக்களுக்கே எந்தப் பாதுகாப்பும் இருக்காது என்று தெரிகிறது. 'ராமராஜ்யம்' என்பது பார்ப்பனர்களின் ராஜ்ஜியமாக மட்டுமே இருக்கும் என்பதும் தெளிவாகின்றது.

இராமயணக் கதைப்படி, சம்பூகன் திருடவில்லை, கொலை செய்யவில்லை, எந்தவிதமான வன்முறையிலும் ஈடுபடவில்லை. பொய் கூடச் சொல்லவில்லை. கடவுளை நினைத்துக் கடுந்தவம் செய்ததைத் தவிர, வேறு ஏதும் செய்யவில்லை.

ஆக, நாத்திகர்களுக்கு மட்டுமின்றி கடவுள் நம்பிக்கை உடைய ஆத்திகர்களுக்கும் ராமராஜ்யத்தில் மரண தண்டனை காத்திருக்கிறது. என்பதைச் 'சூத்திர பக்திமான்கள்' உணரவேண்டும். இந்துவா, இஸ்லாமியரா, கிறித்துவரா என்பதோ கடவுள் நம்பிக்கை உள்ளவரா, இல்லாதவரா என்பதோ ஒழுக்கமானவரா, ஒழுக்கமற்றவரா என்பதோ ராமராஜ்யத்தில் முக்கியமில்லை. நீங்கள் பார்ப்பனரா, பார்ப்பனர்



Scanned by CamScanner

அல்லாதவரா என்பது மட்டும்தான் முதன்மையானது. பார்ப்பனராய் இருந்தால் பொன்னும், பொருளும் பெறலாம். இல்லையேல், உங்கள் தலைக்குக்கூட உத்தரவாதமில்லை.

முகலாய சாம்ராஜ்யத்தில், இந்துக்களுக்குத் 'தலைவரி' என்றஒன்றை விதித்தார்கள். ஆகவே, இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சி கொடியது என்பார்கள் பார்ப்பனர்கள். அவர்களாவது தலைக்கு வரிதான் போட்டார்கள், இராமரோ இந்துக்களின் தலையையே எடுத்துவிட்டார். இராமரால் கொல்லப்பட்ட இராவணன், வாலி, கும்பகருணன், இந்துரசித்து உள்ளிட்ட எல்லோரும் 'இந்துக்கள்' தாமே? அது மட்டுமல்லாமல், வால்மீகி ராமயணத்தின் யுத்த காண்டத்தில் உள்ள 'சேதுபந்தன சருக்கத்தில்' தீவுகளில் வாழும் பழங்குடி மக்கள் பலரின் தலைகளையும் கொய்துவிடுகிறது. இராமரின் அம்பு. அது ஒரு தனிக்கதை. இங்கு விரித்தால்பெருகும்.

இப்படி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் எதிரியாக இருந்துள்ளது ராமராஜ்யம். எனவே ராமரின் ஆட்சியை, ராமராஜ்யம் என்பதைவிடப் பார்ப்பன ராஜ்யம் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும்.

இதனைத்தாண்டி, நாம் மேலே கண்ட வால்மீகி ராமாயணத்தில், வேறு பல குழப்பங்கள் இருப்பதையும் அறிய முடிகிறது.

யாரோஒரு சூத்திரன் தவம் செய்வதால்தான் இந்தப் பிராமணச் சிறுவன் இறந்துபோய்விட்டான் என்று ஞானதிருஷ்டியால் அறிந்துகொண்ட நாரதருக்கு, அவன் எந்தத் திசையில் அந்தத் தவத்தை மேற்கொண்டுள்ளான் என்பது மட்டும் தெரியாமல்போய்விட்டது போலும். பாவம் இராமன், திசை திசையாய் அலைகிறான்.

ராமராஜ்யப் பரிபாலனம் ஒன்றையும் இங்கு காணமுடிகிறது. குற்றவளி என்று கருதப்படுபவன் கூடத் தன் பக்க நியாயத்தைக் கூற அனுமதிக்கப்படுகின்றான். ராமராஜ்யத்தில் அதுகூட இல்லை. சம்பூகன் ஏன் அவ்வாறு செய்கிறான், அவன் பக்கத்து நியாயம் என்ன என்று எதையுமே இராமர் தெரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. உறைவாளை எடுத்தார், அவன் தலையைக் கொய்தார். இதுதான் ராமராஜ்யம் வழங்கும் நீதி முறை.



Scanned by CamScanner

## ராமராஜ்யத்தில்
# வீட்டின் நிலை

இராமரின் ஆட்சியில் 'சமூகநீதி' எப்படி இருந்துள்ளது என்பதைச் சம்பூக வதம் நமக்கு எடுத்தக் காட்டியது! குடும்ப நீதி எப்படியிருந்தது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

சமூகத்தில் பார்ப்பன ஆதிக்கம் இருந்ததைப் போலவே, குடும்பத்தில் ஆணாதிக்கம் மிகுந்திருந்திருக்கிறது. இரண்டும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடையவை. அறிவியல் , பகுத்தறிவு , பெண்விடுதலைக் கோட்பாடு முதலியன வளர்ந்தோங்கி நிற்கும் 21 ஆம் நூற்றாண்டிலும்கூட, அவ்விரு ஆதிக்கங்களும் மேலோங்கி நிற்பதை நாம் காண்கிறோம். எனவே அன்றைய சூழலில் அவை மிகுந்து நிற்பதில் வியப்பொன்றும் இல்லை. ஆனால் 'கடவுள் அவதாரம்' என்று புனைந்துரைக்கப்பட்ட இராமர் அவற்றிற்குத் துணை போயிருக்கிறார் என்பதை விட அவற்றிற்கு விதை போட்டிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. என்வே, இராமர் பின்பற்றப்பட வேண்டிய அரசரோ, குடும்பத் தலைவரோ இல்லை என்பதுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தி.

'இராமன் ஏகபத்தினி விரதன்' என்பதெல்லாம் கம்பனின் புனைவுகள். வான்மீகி ராமன் மனைவியர் பலருடையவன்; புலாலும், கள்ளும் உண்டு மகிழ்ந்தவன் என்று வான்மீகி இராமனையும், கம்பராமனையும் ஒப்பிட்டுப் புலவர் ஆ. பழநி எழுதியுள்ள வரிகள் சிறப்பானவை.



Scanned by CamScanner

*"வான்மீகி படைத்து வழங்கிய இராமன்*
*ஊனும் கள்ளும் உவந்து கொண்டவன்*
*சராசரி மனிதனின் சாயலைக் கொண்டவன்"*

என்று கூறும் அவர், மேலும் ஒப்பிட்டு,

*"வன்மீகி ராமன் இயற்கையின் வடிவம்*
*கம்பனின் ராமன் செயற்கையின் உச்சம்*
*துடைத்துத் துடைத்து மெருகு துலங்கப்*
*படைக்கப் பட்டது இராம காதை*
*இப்படித் துடைத்தும் இன்னும் அழுக்குகள்*
*ஒட்டிக் கிடப்ப தென்னவோ உண்மைதான்"*

என்று முடிப்பார்.

பேராசிரியர் தெ. ஞானசுந்தரம், வான்மீகி ராமன், ஆரண்ய காண்டத்தில் தன் மனைவி சீதைக்கு மாமிசத் துண்டுகளைல் கொஞ்சிக் கொஞ்சி ஊட்டும் காட்சியைத் தன் உரை ஒன்றில், கம்பர் விழாவில் எடுத்து வைத்தார்.

ஆதலால் வான்மீகியின் ராமன், இயல்பான மானுடப் போக்குகளை விஞ்சிய, போற்றத்தகுந்த பண்புகள் எவையும் கொண்டவனில்லை. கம்பராமனும் கூட, யுத்த காண்டத்தில் மனைவி சீதையிடம் நடந்து கொண்ட விதம் மிக இழிவானதாகவும், கொடூரமானதாகவுமே உள்ளது.

களத்தில் இராவணனைக் கொன்று முடித்த ராமன் அனுமன் மூலமாக அச் செய்தியைச் சீதைக்குச் சொல்லியனுப்புகின்றான். பிறகு, சீதையை அழைத்து வருமாறு விபீடணனை அனுப்புகின்றான். உடுத்தி இருந்த உடையுடன் புறப்பட்ட சீதையிடம், அணிபுனைந்து வரவேண்டும் என்பது இராமனின் கட்டளை என்கிறான் விபீடணன்.

ஒரு பெண் எதை உண்ண வேண்டும், எப்படி உடுத்த வேண்டும் என்பதையெல்லாம்கூட, ஓர் ஆண்தான் தீர்மானிக்கிறான். இராமனும்அதற்கு விதிவிலக்கானவன் இல்லை.

புத்தாடை அணிந்து, புது அணிகள் பூண்டு பேருவகை பொங்க விபீடணனோடு வந்துசேரும் சீதையைப் பார்த்து இராமன் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? "ஒழுக்கம் பாழ்பட்ட பின்னும், இன்னும் உயிரோடு இருக்கிறாயே, ஏன்?" என்பதுதான்.

ஒருநாளும் இராமன் சீதையைப் பார்த்து அப்படிச் சொல்லியிருக்க மாட்டான் என்று யாராவது கருதினால், கம்பராமாயணத்தின் 10157 ஆவது பாடலைப் படியுங்கள்.

"ஊண்திறன் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டுறைந் தடங்கினை அச்சம் தீர்ந்திவண்
மீண்டது ஏன்?"

என்பதுதான் அப்பாடல். 'ஒழுக்கம் பாழ்பட மாண்டிலை' என்கிறான் இராமன். "ஒழுக்கம் கெட்ட பின்னும், ஏன் இன்னும் செத்துத் தொலையாமல் இருக்கிறாய்?" என்பதுதான் பிரிந்திருந்த மனைவியைப் பார்த்து இராமன் உதிர்த்த அன்புமொழி. 'ஊண்திறம் உவந்தனை' என்பதற்கு என்ன பொருள்? "அவர்கள் கொடுத்த வகைவகையான உணவு வகைகளைத் தின்று மகிழ்ந்திருந்தவள் தானே நீ" என்பதுதான்.

இவ்வளவு இழிவுபடுத்திய இராமனிடம், தன் கற்பை மெய்ப்பிக்க, இலக்குவன் மூட்டிய தீயில் இறங்குகிறாள் சீதை.

"மனத்தினால், வாக்கினால் மருவுற் றேனெனில்
சினத்தினால் சுடுதியால் தீச்செல்வா"

என்று கூறி அவள் நெருப்பில் இறங்குகிறாள். "மனத்தினாலோ, சொல்லினாலோ பிழை செய்த்திருந்தால், நெருப்பே நீ என்னைக் கோபம் கொண்டு சுடு" என்பது இதன் பொருள்.



இங்கேயும் கூட அறிஞர் அண்ணா ஒரு கேள்வியை முன்வைப்பார். பொதுவாக, மனம், வாக்கு, மெய் என மூன்றையும் சேர்த்துச் சொல்வதுதான் மரபு. எண்ணம், சொல், செயல், மூன்றும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்பதே மேலோர் நிலை. ஏனோ சீதை "மனம் வாக்கு மெய்யினால் மருவுற்றேன் எனில்" என்று சொல்லாமல், மெய்யை (உடலை) விட்டு விட்டு, மனத்தினால், வாக்கினால் என இரண்டோடு மட்டும் நிறுத்திக் கொண்டாள் என்பது தெரியவில்லை என்பார். இது சீதையின்



Scanned by CamScanner

பிழையோ, பாடிய கம்பனின் பிழையா என்றும் கேட்டார்.

இது ஒரு புறமிருக்க, அனைவரது முன்னிலையிலும் தீப்பாய்ந்து, தன் கற்பைச் சீதை மெய்ப்பித்துக் கொண்டாள் என்று சொல்லும் கம்பராமாயணம்.

கற்பு என்றால் என்ன என்பது ஒருபுறமிருக்கட்டும். கற்பை மெய்ப்பிக்க இதுதானா வழி ? ஆண்களுக்குத் தம் மனைவியரைச் சோதிக்க இராமன் காட்டும் பாதை இதுதானா? இந்த வகையில், தங்கள் கற்பை மெய்ப்பிக்க முன்வரும் பெண்களின் நிலை என்னாகும்?

கம்பராமனின் நிலை இதுவென்றால், உத்தரகாண்டத்தில் வரும் வான்மீகி ராமன் இன்னும் மோசமாக இருக்கிறான். நெருப்பில் குளித்து மீண்ட பின்னும், தன் மனைவியை அவன் நம்பவில்லை. யாரோ சொன்னார்கள் என்பதற்காகக் கருவுற்றிருக்கும் தன் மனைவியைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுகிறான். லவகுசா என்னும் பிள்ளைகள் பிறந்து, பிற்காலத்தில் சீதையை மீண்டும் சேர்த்துக் கொள்ள முன்வரும் நிலையில், மீண்டும் ஒருமுறை கற்பை மெய்ப்பிக்க வேண்டும் என்று ஆணையிடுகிறான்.

இராமன் கடவுளா, கற்பு பரிசோதனை நிலையக் காவலனா என்று தெரியவில்லை.

இனி, உத்தரகாண்டத்தில் வரும் அக்காட்சிகளை நேரடியாகவே பார்க்கலாம்.

ராமராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருந்த நாள்களில் ஒரு நாள், இராமர் கருவுற்றிருந்த சீதையோடு உய்யான வனங்களில் உலவிக் கொண்டிருந்தார். இயற்கை அழகுகளைக் காட்டியும், நேர்த்தியான மாமிசங்களை ஊட்டியும், மேலான 'மைரேயே' என்னும் மதுவைக் கொடுத்தும் சீதையை மகிழ்வித்தார்.

உடனே சீதை, "நாத! மறுபடியும் புண்யாசிரமங்களைப் பார்க்க வேண்டும். கந்த மூலபலங்களைப் புஜித்துத் தேஜஸால் ஜ்வலிக்கும் மஹரிஷிகள் கங்கைக் கரையில் வஸிக்கிறார்கள். அவர்களை நமஸ்கரிக்க வேண்டும். அவ்விடத்தில் ஒரு ராத்திரியாவது தங்கவேண்டுமென்று எனக்கு மிகுந்த ஆசையுண்டாகி இருக்கிறது" (ஸர்க்கம் 42) என்று பிரார்த்தித்தாள்.

இங்கேதான் சீதை தனக்குத் தானே சிக்கலைத் தேடிக்கொண்டாள். அது எவ்வாறு என்பதைப் பின்வரும் காட்சிகள் விளக்கும்.



Scanned by CamScanner

43 ஆவது சருக்கத்தில், இராமர் அவையில் அமர்ந்து, 'ஹாஸ்யக்' கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். விஜயன், மதுமந்தன், காச்யபன் முதலான பலர், இராமனுக்குப் பல 'பரிஹாசக்' கதைகளைச் சொல்ல, இராமரும் கேட்டுக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருக்கிறார். திடீரென்று அவருக்கு மக்கள் நினைவு வருகிறது. "ஆமாம், ஜனங்கள் நம்மைப் பற்றியும் நம்ஆட்சியைப் பற்றியும் என்ன பேசிக் கொள்கிறார்கள்?" என்று கேட்கிறார்.

ராமராஜ்யம் பற்றி வானளாவப் புகழ்வதாகச் சிலர் சொல்கின்றனர். சுபத்தை மட்டுமல்லாமல், அசுபத்தையும் மறைக்காமல் சொல்லுமாறு இராமர் ஆணையிடவே, வேறு வழியின்றி, பத்ரன் என்பான், வணக்கமாய் கைக்கூப்பி, உண்மையைச் சொல்லத் தொடங்குகின்றான்.

அவனும், மக்கள் பேசிக் கொள்ளும் இராமரின் பெருமைகள் பலவற்றை அடுக்கிட்டு, இறுதியில், சீதையைப் பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்கின்றனர் என்பதைக் கூறுகின்றான்.

இங்கு ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். யாரோ ஒரு சலவைத் தொழிலாளியும், அவன் மனைவியும் பேசிக் கொள்வதாகத்தான் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் அவ்வாறு வான்மீகி எழுதவில்லை. ஊரே பேசிக் கொள்வதாகத்தான், பத்ரன் கூறுகிறான்.

"ஸ்வாமி! ஸீதையை லங்கையிலிருந்து சிறைமீட்டு, ராவணன் அவனைத் தொட்டு எடுத்தான் என்பதை முற்றிலும் மறந்து, அயோத்யைக்கு அழைத்து வந்து, அந்தப்புரத்தில் ராமர் வைத்துக்கொண்டிருக்கிறார். ராவணன் அவளை பலாத்காரமாய்த்தூக்கி எடுத்து மடியில் வைத்துக் கொண்டு போனான். அசோக வனத்தில் வைத்தான். அவனுடைய வசத்தில் அநேக மாதங்கள் வரையில் இருந்த ஸீதையிடம், ராமனுக்கு வெறுப்பு உண்டாகவில்லையே. அவளிடத்தில் அனுபவிக்கும் ஸுகமும் ஒரு ஸுகமா? நம்முடைய பாரியைகளும் இப்படிச் செய்தால், நாமும் இதைப் பொறுத்துக் கொண்டிருக்கவேண்டும். அரசன் எப்படியோ, பிரஜைகளும் அப்படியல்லவாஞ் என்று பலவிதமாய்ப் பேசிக் கொள்கிறார்கள்" என்றான்.

மற்றவர்களும் "ஸ்வாமி! பத்ரன் சொல்வதெல்லாம் ஸத்தியமே" என்றார்கள்.

அவ்வளவுதான் இராமன் வெகுண்டெழுந்து விடுகிறான். அவையில் கேட்ட, ஹாஸ்ய, பரிஹாசக் கதைகளிலிருந்தெல்லாம் விடுபட்டு, ஒழுக்கம் இல்லாதவள் என்று ஊரே சொல்லும்போது , அந்தச் சீதையை அரண்மனையில் எப்படி வத்துக் கொள்வது என்ற தவிக்கிறான். துவார



Scanned by CamScanner

பாலனை அழைத்துத் தன் ஸகோதரர்களைச் சீக்கிரமாய் அழைத்து வா என்றான்.

அவர்கள் வந்து சேரும்போது, இராமர் தாரைதாரையாய்க் கண்ணீர் வடித்தபடி இருக்கிறார். தம்பியர் அனைவரும், காணாத காட்சி கண்டு திகைக்கின்றனர். பதறுகின்றனர். என்ன நடந்தது என்று வினவுகின்றனர்.

'களையற்ற தாமரை மலரைப் போன்ற முகத்துடன்' இருந்த இராமர், தன் தம்பியரிடம் நடந்தனவற்றைச் சொல்லத் தொடங்கினார். " நமது நகரத்திலும், தேசத்திலும் உள்ள சில மூட ஜனங்கள், அறியாமையால் ஸீதையின் நடத்தையைப் பற்றித் தூஷிக்கிறார்கள். என்னிடத்தில் அவர்களுக்கு வெறுப்புண்டாகியிருக்கிறது. அது என் மனத்தை அறுக்கின்றது" என்கிறார்.

பிறகு, சீதை 'அக்கினிப்பிரவேசம்' செய்து தன் கற்பை மெய்ப்பித்த செய்தியை நினைவூட்டி, அவள் கற்பில் சிறந்தவளே என்கிறார். எனினும் மக்களிடம் தனக்கு 'அபகீர்த்தி' வந்துவிடுமோ என்று அஞ்சுவதாகக் கூறுகின்றார். "அபகீர்த்தி தேவர்களால் நிந்திக்கப்படுகிறது. கீர்த்தி எல்லோராலும் கொண்டாடப்படுகிறது" என்றார். "நான் யாரை வேண்டுமானாலும் கைவிடுவேன், உயிரை விட்டாலும் விடுவேன். இறுதியில், சீதையைக் காட்டில் கொண்டுபோய் விட முடிவெடுத்து விட்டதாகக் கூறுகிறார்.

தம்பியர் பதறுகின்றனர். ஆனால் இராமர் யாரையும் பேச அனுமதிக்கவில்லை. "நீங்கள் யாராவது என்னை ஸமாதானப்படுத்த ஒரு வார்த்தை சொன்னாலும் எனக்குச் சத்ருக்கள் ஆவீர்கள்; என் இஷ்டத்தைத் தடுத்தவர்கள் ஆவீர்கள்" என்று சொல்லிவிடுகின்றார். எனவே, இராமனின் 'ஜனநாயகத்தை' ஏற்று எவரும் பேசவில்லை.

சீதையைக் காட்டில் கொண்டுவிடும் பணி இலக்குவனுக்கு அளிக்கப்படுகின்றது. இலக்குவனைப் பார்த்து , "லக்ஷ்மண! நீ நாளைக் காலையில் ஸுமந்திரரை ரதத்தைக் கொண்டு வரச் சொல்லி, அதில் ஸீதையை ஏற்றி, நமது ராஜ்ஜியத்திற்கு வெளியில் கொண்டு போய் விடு. கங்கைக்கு அக்கரையில் தமஸா தீரத்தில் வால்மீகியின் புண்யாசிரமம் இருக்கிறது. அதற்கு ஸமீபத்திலுள்ள நிர்மானுஷ்யமான காட்டில் அவளைக் கொண்டு போய் விடு. அங்கே ஒரு நிமிஷம் கூடத் தங்காமல் திரும்பிவா" என்று ஆணையிடுகிறார்.


எதற்காகக் காட்டில் கொண்டுபோய் விடுகிறோம் என்னும் காரணத்தைக் கூடச் சீதையிடம் சொல்லக்கூடாது என்பதும் இராமனின் ஆணை. 'கங்கைக் கரையிலுள்ள புண்ணிய ஆசிரமங்களைப் பார்க்க

வேண்டும் என்று சீதை ஆசைப்பட்டாள். அதனை நிறைவேற்றுவதற்காகவே அழைத்துச் செல்வதாகச் சொல். பிறகு ஒன்றும் சொல்லாமல் நீ மட்டும் திரும்பி வந்துவிடு' என்றும் தம்பிக்கு அவர் அறிவுரை கூறுகிறார்.

ஆக, இராமனுக்கு, எந்தக் குற்றமும் சீதையிடம் இல்லை என்பது தெரிந்திருக்கிறது. அக்கினிப் பிரவேசத்திற்குப் பின்பு முழுமையாக நம்புவதாய்ச் சொல்கிறார். (அதற்கு முன்பு கொஞ்சம் சந்தேகம் இருந்திருக்கும் போலிருக்கிறது). சீதையின் மீது பழி சுமத்துவோர், மூட ஜனங்கள் என்றும், அறியாமையின் பொருட்டே அவ்வாறு செய்கின்றனர் என்றும் கூடத் தன் தம்பியரிடம் கூறுகிறார்.

இவ்வளவு தெளிவாக இருக்கும்போது, மூடத்தனமான மக்களின் அறுயாமைக்காகத் தன் அன்பு மனைவியை யராவது காட்டில் கொண்டு போய் விடுவார்களா? சாதாரண மனிதன் கூடச் செய்யத் தயங்கும் ஒருசெயலை, 'கடவுளின் அவதாரம்' ஏன் செய்தார் ?

லோக அபவாதத்தால் வரக்கூடிய அபகீர்த்திக்கு அஞ்சியே இந்த அநீதியைச் செய்வதாக அவரே ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறா். அதாவது, உலக மக்களின் பழிச்சொல்லால், தன் புகழுக்குக் களங்கம் வந்துவிடக்கூடாது என்பது மட்டுமே அவருடைய எண்ணமாக இருக்கிறது. தன் புகழுக்காக, தன் நலத்துற்காக எந்த ஒரு அநீதியையும் செய்யத் தயங்காதவராகவே இராமர் தன்னை அமைத்துக் கொண்டுள்ளார்.



ஒரு நிர்மானுஷ்யக் காட்டில் அதாவது மனித அரவமே இல்லாத காட்டில் கொண்டுபோய் விட்டுச், சொல்லாமல் திரும்பி வந்துவிடு என்று சொல்வது என்ன நியாயம்?

மனைவி, பட்டத்தரசி என்பதையெல்லாம் தாண்டி, எந்த ஒரு பெண்ணுக்கும் இந்த அநீதி இழைக்கப்படலாமா? தவறேதும் செய்யாத ஒரு பெண் தண்டிக்கப்படுகிறாள். எதற்காக இவ்வளவு கொடிய தண்டனை என்பது கூட அவளுக்குச் சொல்லப்படவில்லை. இதுவா ஒரு சிறந்த அரசுக்கு இலக்கணம்? இந்த

ராமராஜ்யத்தைத்தானா கம்பன் தொடங்கிக் காந்தியார் வரை பாராட்டியிருக்கிறார்கள்?

சரி, இனிக் காட்டில் என்ன நடந்தது என்று பார்க்கலாம்.

அண்ணன் சொல்லை அப்படியே ஏற்பவன்தான் இலக்குவன், ஆனால் அவனுக்கே மனம் இளகி, என்ன நடக்கிறது என்பதைக் காட்டில் சீதையிடம் சொல்லி விடுகிறான்; அண்ணனின் ஆணையை மீறி, எல்லா உண்மைகளையும் சொல்லி விடுகிறான்; சொல்லிவிட்டு அழுகிறான்.

சீதையால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. மயங்கிச் சாய்கிறாள். 'ஒரு முகூர்த்தம்' வரை (1½ மணி நேரம்) நினைவற்றுக் கிடந்து, பின் தெளிந்து, மெல்ல எழுந்து 'ஓ' வென்று அழுகிறாள்.

"இந்த நிர்மானுஷ்யமான வனத்தில் நான் எப்படி இருப்பேன்? யாரிடம் என் துக்கத்தைச் சொல்லி ஆறுதலடைவேன்? எப்படிக் காலம் கழிப்பேன் என்ன ஆஹாரத்தைப் புசிப்பேன்?" என்று பலவாறாக அரற்றி அழுகிறாள்.

இராவணனால் கடத்தப்பெற்று அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டபோது சீதை அழுத கண்ணீர் பற்றிப் பக்கம் பக்கமாய் எழுதும் 'ராமபக்தப் பண்டிதர்கள்' இராமனால் நேர்ந்த இக்கொடுமையை எண்ணி, யாருமில்லாக் காட்டில், அவள் ஆற்றாது அழுத கண்ணீர் குறித்து ஏன் எதுவும் எழுதவில்லை?

சீதைக்கு இராவணனால் நேர்ந்த துன்பத்தைக் காட்டிலும், இராமனால் நேர்ந்த துன்பம்தானே மிகக் கொடியது. இராவணன் ஓரிடத்திலும் தரக்குறைவாகச் சீதையிடம் பேசவில்லையே. அவளைச் சொல்லினால் சுட்டவன் இராமன்தானே?

இத்தனை கொடுமைகள் செய்த இராமனுக்கு எந்தக் கெடுதலும் நினைக்கக்கூடாது என்பதுதான், இலக்குவன் சீதையிடம் இறுதியாய் வைக்கும் வேண்டுகோள்.

"வருத்தப்பட வேண்டாம். அதி ஸமீபத்தில் வால்மீகி மஹரிஷி வஸிக்கிறார். அவர் தசரதச் சக்கரவர்த்திக்குப் பரம மித்திரர். அபாரக் கருணையுள்ளவர். மஹா கீர்த்திமான். எப்பொழுதும் இராமரையே மனத்தில் தியானித்துக் கொண்டு, உபவாஸங்களையும், விரதங்களையும் அனுஷ்டித்துக் கொண்டு அவரையே தெய்வமாய் எண்ணிக் காலத்தைக் கழித்து வந்தால், தங்களுக்குப் பரம மங்களம் உண்டாகும். ஆபத்திலும், ஸம்பத்திலும் ஸ்திரீகளுக்குப் பர்த்தாவே தெய்வமல்லவா?" என்பதுதான்,



Scanned by CamScanner

இலக்குவன் சீதைக்குக் கூறும் அறிவுரை.

ஆபத்து வரும்போது கணவனைப் பெண்கள் நினைத்துக் கொள்ள வேண்டும் என்று இலக்குவன் 'இலவச ஆலோசனை' வழங்குகிறான். ஆபத்தே கணவனால் தான் வந்திருக்கிறது என்பது அந்த 'அறிவாளிக்குத்' தெரியாதா?

சீதையும் அதனை ஏற்றுக் கொள்கிறாள். என்ன இருந்தாலும், கணவன்தானே பெண்ணுக்குத் தெய்வம் என்று, அடிமட்டமான பெண்ணடிமைத் தனத்தை அவளும் முன்மொழிகிறாள்.

கடைசியாக இலக்குவனைப் பார்த்து, "ராமனுக்கு இவ்விதமான அபவாதம் வராமல் இருக்கும்படி, நான் இப்பொழுது கர்ப்பவதியாக இருக்கிறேன் என்பதையும் பார்த்துவிட்டுப் போ" என்கிறாள்.

அதைக் கேட்ட இலக்குவன் மனம் நொந்து, சீதையின் கல்களில்விழுந்து, "ஸகல கல்யாண குணங்களும் பொருந்தின தாங்கள் என்னைப் பார்த்து இப்படிச் சொல்வது தர்மமா? இதுவரையில் தங்களுடைய பாதங்களைத் தவிர நான் தங்களை எப்பொழுதாவது கண்ணெடுத்துப் பார்த்ததுண்டா? இந்த நிர்மானுஷ்யமான கட்டில் ராமனில்லாமல் தாங்கள் தனியாக இருக்கையில், நான் தங்களைப் பார்க்கத் தகுமா?" என்றுக் கூறிக் கண்ணீர் வடிக்கிறான்.

இந்த காட்சி நாம் கவனத்தில் கொள்ளத்தக்கதாக உள்ளது. சீதை முதன் முதலாக, இராமனின் நேர்மையைச் சந்தேகப்படும் இடம் என்று இதனைக் கொள்ளலாம்.

சீதை கருவுற்றிருப்பது இராமனுக்கு நன்றாகத் தெரியும். இராமனுக்குத் தெரியும் என்பது சீதைக்கும் தெரியும். கருவுற்றிருக்கும் நீ என்ன விரும்புகிறாய் என்று இராமன் கேட்ட போதுதான், ரிஷிகளின் புண்ணிய ஆசிரமங்களைப் பார்க்க விரும்புவதாகச் சொல்கிறாள். என்வே, இராமனுக்குத் தெரிந்த உண்மைக்கு, இன்னொரு சாட்சியும் இருக்கட்டும் என்று கருதுகிறாள் சீதை எப்படிக் கருவுற்றாள் என்று கேட்டு, அதற்குத் தனியாக இன்னொரு தண்டனை வழங்கிடவும் வாய்ப்புண்டு, ஆதலால்தான், என்னை விட்டுப் பிரிவதற்கு முன், நான் கர்ப்பவதியாக இருக்கிறேன் என்பதைப் பார்த்துவிட்டு போ என்கிறாள் சீதை.

இப்படி ஒரு நிலை, இராமனால் சீதைக்கு ஏற்பட்ட கொடுமை என்றுதான் கூறவேண்டும்.

இந்தக் காட்சியை அடுத்து இலக்குவன் புறப்பட்டு விடுகிறான். ரதம்



Scanned by CamScanner

மறையும் வரை. சீதை இலக்குவனைப் பார்த்துக் கொண்டே நிற்கிறாள். அது கண்ணிலிருந்து மறைய மறைய, அவளுக்கு அச்சமும், கவலையும் மிகுதியாகின்றது.

"அவள் தன் ஸோகத்தை நினைத்துப் பாரம் தாங்காமல், மயில்களின் சத்தம் நிறைந்த அந்த வனத்தில் பெருங்குரலில் கதறி அழுதாள்" என்னும் குறிப்போடு, 48 ஆவது சருக்கம் நிறைவடைகிறது.

அவளின் கதறல் ஒலி கேட்டு, வால்மீகி முனிவரின் சீடர்கள் அவளைத் தங்கள் ஆசிரமத்துக்கு அழைத்துச் செல்வதும், அங்கு லவ, குச என்னும் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதும் அடுத்தடுத்து வரும் கதை நிகழ்வுகள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, பலரும் புடைசூழ இராமர், கோமதி நதிக்கரையில் அசுவமேத யாகம் செய்ய வருகின்றார். அப்போதுதான், லவ குச இருவரும் பாடிய இராமாயணக் கதையைக் கேட்டு, அவர்கள் தன் பிள்ளைகள் என அறிந்து, வால்மீகியிடம் தூதர்களை அனுப்புகிறார் ஒரு நிபந்தனையோடு! சீதை இவ்வளவு காலம் காட்டில் தங்கியிருந்தமையால், மீண்டும் அவள் தன் கற்பை மெய்ப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதே அந்நிபந்தனை.

மறுநாள் சீதையுடன் அங்கு வந்த வால்மீகி முனிவர். "சீதை யாதொரு குற்றமுமற்றவள். நான் சத்தியம் செய்கிறேன்" என்கிறார். அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே பலர் சீதையின் கற்பு குறித்துக் கூறியதை, இராமனே தன் தம்பியரிடம் பின்வருமாறு எடுத்துரைக்கிறான்.

"அக்னிதேவனும், வாயுவும், ஸுர்ய சந்திர்ரகளும், ஸீதை யாதொரு தோஷமும் அற்றவள் என்று பிரதிக்ஞை செய்யவில்லையா? மஹரிஷிகளும், பிரஹ்ம ருத்திராதி தேவகணங்களும் அதை அங்கீகரிக்கவில்லையா? பிறகு அவளை மஹேந்திரன் என்னிடத்தில் ஒப்புவித்து, இவளைப் போன்ற பதிவிரதையும், சுத்தமான நடத்தையுள்ளவளும் எந்த லோகத்திலும் கிடையாது என்று எல்லோரும் அறியச் சொல்லவில்லையா?" ( சருக்கம் 45 )

தன் மனைவியின் கற்புக்கு இத்தனை பேரிடம் சான்றிதழ் வாங்கிய ஒரே மனிதன் இராமனாய்த்தான் இருக்க முடியும். இத்தனைக்கும் பிறகு, வால்மீகி முனிவரைப் பார்த்து, "தாங்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கையே. ஆனால் என் குடிகள் அறிய, சீதை சபதம் செய்து, குற்றமற்றவளென்று ஏற்பட்ட பிறகல்லவா நான் அவளை விரும்புவது நல்லது" என்று இராமன் கூறுகையில், என்ன செய்வதென்று புரியாமல் விழிக்கிறாள் சீதை.



Scanned by CamScanner



"நன் கற்புடையவளென்பது உண்மையானால், பூமி தேவியே, என்க்கு இடம் கொடு" என்று சீதை சொல்ல, பூமி வெடிக்கிறது. உள்ளேயிருந்து தாரகைகள் ஓர் அழகிய அரியணை கொண்டுவந்தனர். பிறகு சீதையைத் தூக்கிக் கொண்டு பாதாளம் சென்றார். அதன்பின், இராமன் நெடுநேரம் கண்ணீர் வடித்து அழுது கொண்டிருந்தானாம். *(எதற்கு?)*

பூமியில் குழந்தையாய்க் கண்டெடுக்கப்பட்ட சீதையின் வாழ்வு, பூமிக்குள்ளேயே போய் மறைந்துவிட்டதாக, இராமாயாணம் சீதையின் கதையை முடிக்கிறது.

இராமன் அதன்பின் அசுவமேதயாகம் எல்லாம் செய்துகொண்டு, 11,000 ஆண்டுகள் நாட்டை ஆண்டதாகவும் வால்மீகி ராமாயாணம் கூறுகிறது.

இறுதியாக, சரயூ நதிக்கரையில் இறங்கி இராமர் தற்கொலை செய்துகொள்கிறார். தான் மட்டும் தனியாக இல்லை, பெருங்கூட்டத்துடன் சென்று அவர் உயிரை விடுகிறார். இராமன் சரயூ நோக்கிப் புறப்படும் போது, அயோத்தி நகர மாந்தர் அனைவரும், சுக்கிரீவனாதி வானரரும், வீடணனாதி அரக்கரும் இன்னும் பலரும் தங்களையும் அழைத்தேகும்படி வேண்டினர்.

இராமனோ, வீடணனையும், அனுமானையும் மண்ணுலகில் மகிழ்ந்திருக்கச் சொல்லிவிட்டு, மற்றோரை உடனழைத்துச் சென்றாராம். அவர் இறந்ததும், மற்றவர்களும் ஆற்றில் இறங்கித் தற்கொலை செய்து கொண்டார்களாம், அப்போது நான்முகன் அங்கே தோன்றி , பல விமானங்களில் அவர்கள் எல்லோரையும் மேலுலகம் அழைத்துச் சென்றானாம்.



Scanned by CamScanner

தன்னோடு வந்தவர்களையெல்லாம், மேலான பதவிக்கு அனுப்பிவிட்டு, இராமன் உபேந்திரராக (உப + இந்திரர்?) இருந்தார் என்பதோடு, உத்தரகாண்டத்தின் 111 சுருக்கங்களும் நிறைவடைகின்றன.

மேலுலகம் செல்ல எல்லோருக்கும் கடவுச் சீட்டு (PASSPORT) வழங்கிய இராமன், வீடணனையும், அனுமனையும் மட்டும் மண்ணுலகிலேயே இருக்கச் சொன்னது ஏன் என்பதற்கான விளக்கம் இல்லை. மக்களெல்லாம் இறந்தபின்னர், இவர்கள் இரண்டு பேர் மட்டும் இங்கிருந்து என்ன செய்யப் போகிறார்கள் என்றும் தெரியவில்லை.

ஒரு கடவுள் அவதாரம் தற்கொலை செய்து கொண்ட வரலாறு, வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

எது எப்படியோ, 'இதுதான் ராமராஜ்யம்' என்பதைத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டால் சரி !



Scanned by CamScanner



தவம் செய்த சம்பூகன்
இராமனால் கொல்லப்பட்டான் - ஏன்?

கருவுற்றிருந்த சீதை
காட்டிற்கு அனுப்பப்பட்டாள் - ஏன்?

வால்மீகியின் வரிகளிலிருந்தே
ஆதாரங்களை அடுக்குகிறது இந்நூல்.

விலை
ரூ.20

வெளியீடு
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

Scanned by CamScanner